**அஞ்ச வேண்டாம் என்னும் இயேசுவின் வார்த்தைகள் நமக்கு நினைவூட்டுகின்றன.**



தயாரித்தவர்கள்:
அருட்பணி எண்ட்ரு மாணிக்கம்
மாமறை மாவட்ட இறைவேண்டல் பணிக்குழு

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 26/2023

அஞ்ச வேண்டாம் என்னும் இயேசுவின் வார்த்தைகள் நமக்கு நினைவூட்டுகின்றன.

அச்சம் நம்மைப் பீடிக்கும்போது, நாம் எதற்காக அழைக்கப்பட்டோம் என்பதில் நாம் கவனத்தை இழக்க நேரிடும். மேலும் நாம் என்னசெய்ய அழைக்கப்பட்டோமோ அதைச் செய்யத் தவறிவிடுவோம். எது நம்மை தடுக்கிறது? அது அச்சம் தான். என் சீடத்துவ வாழ்வில் எனது கிறிஸ்தவ வளர்ச்சியைத் தடுக்கும் எனது அச்சங்கள் எவை?

அச்சம் என்பது நாம் அனுபவிக்கும் உணர்வுகளில் மிகவும் தொல்லைக் கொடுப்பதும், பேரழிவை ஏற்படுத்துவதாகவும் இருக்கலாம். இது நம்மை சந்தேகத்திற்கு இடமின்றி தடுத்து நிறுத்தும் திறன் கொண்டது. அது நம்முடைய வாழ்வில் நாம் எடுக்கும் முடிவுகளையும் ஆசீரையும் நீக்கி, நமது நம்பிக்கையையும் பலவீனமாக்குகின்றது. மேலும் கடவுளோடு நமக்குள்ள உறவை ஆபத்தில் ஆழ்த்திக் கேள்விக்குள்ளாக்குகிறது.

அச்சம் என்பது நமக்கு உடல்நலக்குறைவை ஏற்படுத்துவது மட்டுமின்றி, நமது ஆற்றலையும் பறிக்கிறது. பயம் மற்றும் பதட்டம் ஆடும் நாற்காலியைப் போன்றது. அது எதையாவது நமக்குக் கொடுத்துக்கொண்டே இருக்கும்; ஆனால் நம்மை எங்குமே கொண்டுசெல்லாது. உண்மையில் அச்சம் நம் வாழ்க்கையை பின்னோக்கி அழைத்துச் செல்லும். ஏனென்றால் அது நாம் செய்யவேண்டிய அன்றாட கடமைகளைச் செய்யத் தேவையான ஆற்றலைத் திருடிக்கொள்கிறது. நம்முடைய உடல்கள் அச்சத்துடன் வாழ்வதற்காக வடிவமைக்கப்படவில்லை. மாறாக நம்மைப் படைத்தவரின் மீது நம்பிக்கை வைத்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

அண்டை வீட்டாரையும் நம்மையும் நேசிப்பதன் அடையாளமாக, நாம் அதை வாழ்ந்து, கொண்டாடி வாழும்போது, நாம் எதற்காக அழைக்கப்பட்டோமோ அதை சரியாகச் செய்ய அச்சப்படத் தேவையில்லை. சரியானதும், மிகவும் உன்னதமானவற்றையும் செய்வதிலிருந்து அச்சம் உங்களைத் தடுக்காதிருக்கட்டும். அச்சத்திலிருந்து நம்பிக்கைக்குச் செல்லவேண்டும். இதனால், நாம் அண்டை வீட்டாரை நேசிக்கவும், நாம் எவ்வாறு இருக்கிறோமோ அதையும் நம்மால் பாராட்டவும் முடியும்.

கத்தோலிக்க மறைபோதம் எண்:1808 - நமக்கு நினைவூட்டுவது: மன உறுதி என்பது நம்முடைய துன்பங்களின்போதும் உறுதியையும், நல்லனவற்றையும் மட்டுமே கடைப்பிடிக்கவேண்டும் என்ற நிலைத்தன்மையையும் உறுதி செய்யும் தார்மீக நற்பண்பு.

24 & 25 ஜூன் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

**பொதுக்காலம் ஆண்டின் 12 ஆம் ஞாயிறு**

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
தன்னை அன்பு செய்தல் மற்றும் அடுத்திருப்பவரை அன்பு செய்தல்

மாதாந்திர நிகழ்வு:
இயேசுவின் திரு இருதயம் & அன்னை மரியாவின் மாசற்ற இருதயம்




உணவகத்தில் நீங்கள் காத்திருக்கும் வேளையில் வேர்க்கடலை வழங்கும் உணவகத்திற்கு சென்றுள்ளீர்களா? அதைப் பார்க்கும் போது, அதை அதிகம் உண்பதற்கு விருப்பம் இருக்காது. ஏனென்றால் நம்முடைய உணவை உண்பதற்குப் பதிலாக வேர்க்கடலையை அதிகம் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொள்ளக்கூடாது என்று நினைப்போம். உங்களுக்கு முன் இருப்பதில் அதிகம் கவனம் செலுத்தவேண்டாம்; ஏனென்றால் இதைவிட அதிகமுக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை மறந்துவிடுவீர்கள்.